**Annex I**

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## பல்கலைக்கழக முறைமையில் உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் மற்றும் உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட (உள்வாரியான பிரிவு) போட்டிப் பரீட்சை - 2025

உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் மற்றும் உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அதனூடாக நிர்வகிக்கப்படும் பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்களில் பணியாற்றுகின்ற தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உள்ளக விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **பரீட்சை, கொழும்பு நகரில் அமைக்கப்படும் பரீட்சை மண்டபங்களில் மாத்திரம் நடாத்தப்படும்.**

1. 'செயலாளர்' என்பதிலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைககுழுவின் செயலாளரைக் குறிப்பீடு செய்யப்படுகின்றது.
2. உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் மற்றும் உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள எழுத்து மூலப் பரீட்சையின் மூலம் மேற்கொள்ளப்படும்.
3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கமைய பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படும்.
4. இந்த வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படும் முதலாவது வெள்ளிக் கிழமைக்கு பின்னர் வருகின்ற திங்கட் கிழமை முதல் மேற்குறிப்பிடப்பட்ட பரீட்சைக்கு இணையவழி (Online) மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் ஆரம்பிக்கப்படும்.
5. **விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025 யூன் 20 ஆம் திகதி ஆகுமென்பதோடு,** குறித்த எழுத்துமூலப் பரீட்சையை 2025 ஆகஸ்ட் மாதம் நடாத்துவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளும்.
6. எழுத்து மூலப் பரீட்சை நடாத்தப்படும் திகதி பற்றிய விபரம் பரீட்சைத் திணைக்களத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.
7. எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளை விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்ட வகையில் அறிவிப்பதற்கு அல்லது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குறிப்பு:

- இந்த எழுத்து மூலப் பரீட்சையுடன் தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வேறு எந்தவொரு கடிதமோ தபாலில் தொலைந்துவிடல் அல்லது தாமதமடைதல் தொடர்பான எந்த விதமான முறைப்பாடுகளும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய எந்தவொரு பாதிப்பையும் விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

**<u>ஆட்சேர்த்துக்கொள்வதற்கான தகைமைகள்:</u>**

ஆட்சேர்த்துக் கொள்வதற்கான பொதுவான தகைமைகள் :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**தகைமைகள் - உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் பதவி**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து / உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து ஆரம்ப (இளமாணி) பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் ஆணைக் குழுவில் / உயர் கல்வி நிறுவகமொன்றில் தற்போது வகிக்கும் பதவியில் உறுதி செய்யப்பட்டுள்ள ஊழியராக இருத்தல்.

**அல்லது**

(ஆ) ஆணைக் குழுவில் / உயர் கல்வி நிறுவகமொன்றில் U-MN l(II) / U-MT 1(II) அல்லது அதனிலும் உயர்ந்த சம்பளப் படிநிலையில் வகைப்படுத்தப்பட்டுள்ள பதவியொன்றை வகிப்பவராக இருத்தல் மற்றும் அப் பதவியில் உறுதி செய்யப்பட்டிருத்தல்.

வயது : ஐம்பத்து மூன்று (53) வயதிலும் அதிகமாக இருத்தல் கூடாது (எனினும், 15/2017 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.)

**தகைமைகள் - உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவி**

1. (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து /உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட ஆரம்ப (இளமாணி) பட்டமொன்றைப் பெற்றிருக்கின்ற மற்றும் ஆணைக் குழுவில் / உயர் கல்வி நிறுவகமொன்றில் தற்போது வகிக்கும் பதவியில் உறுதி செய்யப்பட்டுள்ள ஊழியராக இருத்தல்.

**அல்லது**

(ஆ) ஆணைக் குழுவில் / உயர் கல்வி நிறுவகமொன்றில் U-MN l(II) / U-MT 1(II) அல்லது அதனிலும் உயர்ந்த சம்பளப் படிநிலையில் வகைப்படுத்தப்பட்டுள்ள பதவியொன்றை வகிப்பவராக இருப்பதுடன் அப் பதவியில் உறுதி செய்யப்பட்டிருத்தல்.

**மற்றும்**

2. ஆணைக் குழுவில் / உயர் கல்வி நிறுவகமொன்றில் / நிறுவகமொன்றில் நிதி / கணக்காய்வுத் திணைக்களம் / பிரிவுகளில் குறைந்தது இரண்டு வருட கால (02) சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

வயது : ஐம்பத்து மூன்று (53) வயதிலும் அதிகமாக இருத்தல் கூடாது (எனினும், 15/2017 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.)

**தகைமைகள் பற்றிய வரையறைகள்:**

1. ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய வெளிவாரிப் பிரிவின் கீழ் அல்லது உள்வாரிப் பிரிவின் கீழ் இரண்டு (02) தடவைக்கு மேல் தோற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது. (2016.12.31 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைக்கு தோற்றிய தடவைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது).

2. எவரேனுமொரு உள்வாரி (மட்டுப்படுத்தப்பட்ட) விண்ணப்பதாரியொருவர் ஏதேனுமொரு பதவிக்காக (உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் மற்றும் உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர்/ உதவி உள்ளகக் கணக்காய்வாளர்) வெளிவாரி (திறந்த) மற்றும் உள்வாரி (மட்டுப்படுத்தப்பட்ட) ஆகிய இரண்டு பிரிவுகளுக்கும் தகைமை பெறுவாராயின் அவர் உள்வாரி அடிப்படையின் கீழ் இரண்டு (02) தடவைகள் மற்றும் வெளிவாரி அடிப்படையின் கீழ் இரண்டு (02) தடவைகள் என நான்கு (04) தடவைகள் எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவார். (2016.12.31 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைக்கு தோற்றிய தடவைகள் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட மாட்டாது).

3. தேவையான அனைத்து தகைமைகளையும் வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் உள்ளக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4. எந்தவொரு மதத்தையும் சேர்ந்த துறவி மத போதகருக்கும் ஆட்சேர்ப்புக்கான எழுத்து மூலப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

**ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் முறை :**

எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஊடாக ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1. ஒவ்வொரு பிரிவின் கீழான சகல விண்ணப்பதாரிகளும் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் குறிப்பிட்ட பிரிவுக்கான பாடப் பரப்புக்குட்பட்ட எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்;

| பதவி | பாடம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் | 03. ஆங்கில மொழி | 100 | 40 |
| | 05.பல்கலைக்கழக முறைமை மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்டங்கள் | 100 | 40 |
| | 06.பொது நிர்வாகம் மற்றும் நிதிசார் நடைமுறைகள் | 100 | 40 |
| உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் | 03. ஆங்கில மொழி | 100 | 40 |
| | 05.பல்கலைக்கழக முறைமை மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்டங்கள் | 100 | 40 |
| | 07.கணக்கியல் மற்றும் நிதி நிர்வாக நடைமுறைகள் | 100 | 40 |

2. எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை நிரூபிப்பதற்கு தேவையான எழுத்து மூலமான ஆவணங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அறிவிக்கப்படும் பிரகாரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அனைத்து தகைமைகளையும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதியாகும்போது பெற்றிருத்தல் வேண்டும். எவரேனுமொரு விண்ணப்பதாரி வழங்கப்பட்ட திகதிக்கு முன்னர் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான எழுத்து மூலமான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறும் பட்சத்தில் அவர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைதல் நியமனத்திற்கான தகைமையைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதப்பட மாட்டாது.

3. எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் 40% அல்லது அதனிலும் அதிகளவு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளுகின்ற மற்றும் மேலே (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுடைய மொத்தப் புள்ளிகளுக்கமைய வெற்றிடத்தைப் போன்று மூன்று மடங்கு விண்ணப்பதாரிகள் முதலில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

4. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது 40% அல்லது அதனிலும் அதிகளவு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் நியமனம் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படுவதற்கான தகைமையைப் பெறுவார்கள்.

5. எழுத்து மூலப் பரீட்சையில் (75%) மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் (25%) புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் திறமை வரிசைக் கிரமத்தின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

6. வேளிவாரி மற்றும் உள்வாரி பிரிவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பதவிகளின் எண்ணிக்கை மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு திறமை வரிசைக் கிரமத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும்.

**<u>பரீட்சை நடாத்தப்படும் மொழி:</u>**

1. பரீட்சை மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். (சிங்களம்/ தமிழ் / ஆங்கிலம்).

2. விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழி வினாத்தாள் தவிர ஏனைய அனைத்து வினாத்தாள்களுக்கும் விண்ணப்பப்பத்திரத்தில் அவரால் குறிப்பிடப்பட்ட மொழியிலேயே தோற்றுதல் வேண்டும்.

3. எக்காரணத்தினைக்கொண்டும் மொழி மூலத்தை **பின்னர்** மாற்றிக்கொள்வதற்கு எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

**<u>விண்ணப்பிக்க வேண்டிய முறை மற்றும் பரீட்சைக்கான நிபந்தனைகள்:</u>**

1. இணையவழி (Online) விண்ணப்பத்தை ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி (Online) மூலம் அனுப்பப்படும் மென் பிரதியை (Soft Copy) செல்லுபடியாகும் விண்ணப்பமொன்றாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக / ஏற்றுக்கொள்ளப்படவில்லை என இணையத்தள முறைமைக்குப் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்திக்கொள்ளப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தியொன்றினூடாக (SMS) அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். இணையவழி (Online) விண்ணப்பத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து

கொள்ளவும். விண்ணப்பத்தைப் பூரணப்படுத்தும்போது அதிலுள்ள அறிவுறுத்தல்களை சரியான முறையில் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமொன்றாக கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

தற்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில், உயர் கல்வி நிறுவகங்களில், அரசாங்கத் திணைக்களங்களில், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தின் பிரதியொன்றை தனது பெயர்வழிக் கோவையில் (Personal File) உள்ளடக்குவதற்காக நிறுவனத் தலைவர்களிடம் கையளித்தல் வேண்டுமென்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்போது நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியை மற்றும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

2. சகல விண்ணப்பதாரிகளும் தாம் விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற அனைத்துப் பதவிகளையும் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பத்தை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தை குறிப்பிடுதல் கட்டாயமாகும்.

4. பரீட்சைக் கட்டணம் 1200/- ரூபாவாகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது இணையவழி முறைமையினூடாக வழங்கப்படும் கீழ் குறிப்பிடப்படும் கட்டணங்கள் செலுத்துதல் முறையின் கீழ் மாத்திரம் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும்.

5. பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது இணையவழி முறைமையினூடாக கீழ் குறிப்பிடப்படும் கட்டணங்கள் செலுத்துதல் முறையின் கீழ் மாத்திரம் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும்.

- எந்தவொரு வங்கிக் கடனட்டை ஊடாக (Any Bank Credit Card)
- இணையப் பரிவர்த்தனை (பணம் செலுத்தல்) வசதிகளைக் கொண்ட எந்தவொரு வங்கிப் பற்றட்டை ஊடாக (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
- இலங்கை வங்கியின் இணைய வங்கி முறை (Online Banking Method of Bank of Ceylon)
- எந்தவொரு இலங்கை வங்கிக் கிளை ஊடாக (Any Branch of the Bank of Ceylon)

**குறிப்பு:**

(அ) மேலே குறிப்பிடப்பட்ட முறைகள் ஊடாக பணத்தை செலுத்தும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளப் பக்கத்தில் பரீட்சையுடன் தொடர்புடைய தொழில்நுட்ப ரீதியிலான அறிவுறுத்தல்கள் எனும் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) செலுத்திய பணம் கிடைக்கப்பெற்றமை பற்றி குறுஞ் செய்தியொன்றின் (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் (E-mail) செய்தியொன்றின் ஊடாக அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான மொத்தத் தொகையையும் செலுத்த வேண்டுமென்பதோடு, பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்ட பணப் பரிவர்த்தனை (செலுத்தல்) முறைகள் ஊடாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது ஏற்படும் குறைபாடுகள் தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது.

(இ) எவ்விதக் காரணத்தினாலும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படவோ ஏனைய பரீட்சையொன்றுக்காக மாற்றப்படவோ மாட்டாது.

6. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் தீர்மானத்தின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட விண்ணப்பத்திரம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தை இணையவழியில் (Online) மாத்திரம் அனுப்புவார். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடனேயே இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றிக் குறிப்பிட்டு அறிவித்தல் / குறுஞ் செய்தி (SMS) ஊடாக அறிவிக்கப்படும். தனக்குரிய அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி, தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி போன்ற விபரங்களை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், அந்த விபரங்களுடன் பெக்ஸ் மூலமாக பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றை துரிதமாக பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் பெக்ஸ் இலக்கமொன்றைக் குறிப்பிட்டு கோரிக்கை கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்புதல் பயன்மிக்கதாக இருக்கும். அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதி செய்வதற்காக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றை தன்னிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானதாக இருக்கும்.

7. **<u>பொய்யான தகவல்களுக்கான தண்டனை :</u>** விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்யும்போது மிகக் கவனமாக சரியான தகவல்களையே வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதாவது பரீட்சைக்கு முன்னர், பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பதாரியொருவரின் தகுதியின்மை தெரிய வந்தால் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியொருவரால் முன்வைக்கப்பட்டிருக்கும் ஏதேனுமொரு விடயம் பொய்யானதென அறிந்திருந்தும் சமர்ப்பிக்கப்பட்டதாக தெரியவரும் பட்சத்தில் அல்லது அவர் ஏதேனுமொரு முக்கிய விடயத்தை வேண்டுமென்றே மறைத்து வைத்திருப்பதாக தெரியவரும் பட்சத்தில் பல்கலைக்கழக முறைமைச் சேவையிலிருந்து அந்த நபர் நீக்கப்படுவார்.

8. விண்ணப்பதாரிகள் தமக்கு குறித்தொதுக்கப்பட்டிருக்கும் பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சை நடைபெறும் தினத்தில் ஒப்படைத்தல் வேண்டும். சகல விண்ணப்பதாரிகளும் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகள் இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் பரீட்சை சட்ட ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும். அந்த சட்ட ஒழுங்கு விதிகளை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டியேற்படும்.

**<u>குறிப்பு</u> :**

விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படுதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவியொன்றுக்கான தகைமையைப் பூர்த்தி செய்ததாக கருதப்பட மாட்டாது.

9. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம் :** விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பாடங்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ் குறிப்பிடப்படும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும். அவரிடம் தேசிய அடையாள அட்டை மற்றும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை இல்லாதவிடத்து செல்லுபடியாகும் கடவுச் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அத்துடன், விண்ணப்பதாரிகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமான வகையில் முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்களை அணிந்திருக்காதிருத்தலை உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமான பிரகாரம் இரண்டு காதுகளையும் மூடாமல் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாதிருத்தல் வேண்டும்.

10. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நேர்முகப் பரீட்சையின்போது பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்குப் பெற்றுக்கொடுத்ததன் பின்னர் எழுத்து மூலப் பரீட்சையின் (75%) மற்றும் நேர்முகப் பரீட்சையின் (25%) புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில் இறுதி முன்னுரிமைப் பட்டியல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டவுடன் எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் / மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்ட குறிப்பொன்றை பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் அனுப்புவதற்கு அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தில் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் குறைந்தது தகுதிகாண் காலத்தினுள் அவர் இணைத்துக்கொள்ளப்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் அல்லது உயர் கல்வி நிறுவகத்தில் பணியாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

12. விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் / பூரணமற்ற விண்ணப்பங்கள் / மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுடன் இயைந்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:**

இந்தப் பதவி மாதாந்தம் U-EX 1 (II), ரூ. 85,305 –3x2,020 – 91,365 (EB) 93,765; 12x 2,400 - 122,565 எனும் ஒன்றிணைந்த சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்டிருக்கும்.

இது தவிர அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள படிகள் செலுத்தப்படும்.

**பணிக்கொடை:**

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பணிக்கொடை செலுத்தப்படும்.

**<u>சேமலாப நியதியம் மற்றும் ஓய்வூதிய அனுகூலங்கள்:</u>**

ஊழியரால் சம்பளத்தின் (10%) இற்குச் சமமான தொகையும், தொழில் வழங்குனரால் சம்பளத்தின் (15%) இற்குச் சமமான தொகையும் வரவு வைக்கப்படுவதுடன், அதில் (8%) இனை பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்கும், (7%) இனை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கும் தொழில் வழங்குனரால் வரவு வைக்கப்படும்.

**<u>ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அனுகூலங்கள்:</u>**

தொழில் வழங்குனரால் சம்பளத்தின் ( 03% ) இற்குச் சமமான தொகை வரவு வைக்கப்படும்.

**<u>எழுத்து மூலப் பரீட்சைக்கான பாடத் திட்டம் மற்றும் வினாத்தாள்:</u>**

**உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் பதவி**

| வினாப் பத்திரம் | காலம் | விபரம் |
|---|---|---|
| <u>வினாப் பத்திரம் 03</u><br>ஆங்கில மொழி | 1 ½ மணித்தியாலம் | கீழ் குறிப்பிடப்படும் துறைகள் தொடர்பாக மற்றும் விண்ணப்பதாரிகளின் இலக்கணம் மற்றும் முன்வைக்கும் ஆற்றல் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படும்.<br>• கிரகித்தல்<br>• கடிதம் / குறிப்பெழுதும் (MEMO) ஆற்றல்<br>• சிங்களம்/ தமிழ் மொழிகளிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்தல். |
| <u>வினாப் பத்திரம் 05</u><br>பல்கலைக்கழக முறைமை மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்டங்கள் | 03 மணித்தியாலம் | கீழ் குறிப்பிடும் துறைகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் அறிவு பரிசோதிக்கப்படும்.<br>• விடய ஆய்வுகளின் ஊடாக சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை உரிய பிரகாரம் பயன்படுத்தும் ஆற்றல்<br>• உயர் கல்வி நிறுவனங்களின் தீர்மானங்கள், நிர்வாக சபைகளின் அதிகாரங்கள் மற்றும் அலுவல்கள்<br>• உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் உரிய விதிமுறைகள், சட்டம், இடைக்காலச் சட்டம், கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் |
| <u>வினாப் பத்திரம் 06</u><br>பொது நிர்வாகம் மற்றும் நிதி நடைமுறைகள | 03 மணித்தியாலம் | கீழ் குறிப்பிடும் துறைகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் அறிவு பரிசோதிக்கப்படும்.<br>• விடய ஆய்வுகளின் ஊடாக பகுப்பாய்வு செய்யும் ஆற்றல்.<br>• விடயத்துடன் தொடர்பான விடயங்கள் / பிரச்சினைகளுடன் தொடர்பான பிரிவுகளை வாசித்து புரிந்துணர்ந்துகொள்ளும் ஆற்றல் மற்றும் நிலவும் ஒழுங்கு விதிகள் மற்றும் கட்டளையின் பிரகாரம் பதில் அளித்தல்.<br>• ஆட்சேர்ப்பு நடைமுறைகள் சம்பந்தமான அறிவு மற்றும் நியமனம் / பதவி உயர்வு நடைமுறைகள்<br>• பொது நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்<br>• ஒழுக்காற்று நடவடிக்கைகள் |

**உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவி**

| வினாப் பத்திரம் | காலம் | விபரம் |
|---|---|---|
| **<u>வினாப் பத்திரம் 03</u>**<br>ஆங்கில மொழி | 1 ½ மணித்தியாலம் | கீழ் குறிப்பிடப்படும் துறைகள் தொடர்பாக மற்றும் விண்ணப்பதாரிகளின் இலக்கணம் மற்றும் முன்வைக்கும் ஆற்றல் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படும்.<br>• கிரகித்தல்<br>• கடிதம் / குறிப்பெழுதும் (MEMO) ஆற்றல்<br>• சிங்களம்/ தமிழ் மொழிகளிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்தல். |
| **<u>வினாப் பத்திரம் 05</u>**<br>பல்கலைக்கழக முறைமை மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்டங்கள் | 03 மணித்தியாலம் | கீழ் குறிப்பிடும் துறைகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் அறிவு பரிசோதிக்கப்படும்.<br>• விடய ஆய்வுகளின் ஊடாக சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை உரிய பிரகாரம் பயன்படுத்தும் ஆற்றல்<br>• உயர் கல்வி நிறுவனங்களின் தீர்மானங்கள், நிர்வாக சபைகளின் அதிகாரங்கள் மற்றும் அலுவல்கள்<br>• உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் உரிய விதிமுறைகள், சட்டம், இடைக்காலச் சட்டம், கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் |
| **<u>வினாப் பத்திரம் 07</u>**<br>கணக்கியல் மற்றும் நிதி நிர்வாக நடைமுறைகள் | 03 மணித்தியாலம் | கீழ் குறிப்பிடும் துறைகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் அறிவு பரிசோதிக்கப்படும்.<br>• உயர் கல்வி நிறுவகங்களில் இறுதிக் கணக்கை தயாரித்தல்<br>• வங்கிக் கணக்கிணக்கக் கூற்று<br>• இருப்புக்கள் பற்றிய மெய்மையாய்வு<br>• உயர் கல்வி நிறுவகங்களின் கொள்வனவு(பெறுகை) நடைமுறை<br>• காசுப் பாய்ச்சல் கூற்று<br>• உயர் கல்வி நிறுவகங்களின் கணக்காய்வுச் செயற்பாடுகள் |

<u>கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகளை வழங்கும் நடைமுறை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.</u>

**<u>கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகளை வழங்கும் நடைமுறை</u>**
**<u>உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் (உள்வாரியான பிரிவு)</u>**

1. ஆகக் குறைந்த தேவையைப் பார்க்கிலும் உயர் கல்வி மற்றும் தொழில் தகைமைகள் — 20%
2. தொடர்புடைய அனுபவம் — 10%
3. பயிற்சி (குறுகிய கால) — 10%
4. நேர்முகப் பரீட்சைத் திறன்கள் — 40%
5. இணை பாடவிதானச் செயற்பாடுகள் மற்றும் ஆளுமை — 10%
6. விசேட அறிக்கை (சேவை அறிக்கை மற்றும் சம்பளவேற்றத் தகவல்கள் உள்ளிட்ட) — 10%

**<u>கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகளை வழங்கும் நடைமுறை</u>**

**உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவி (உள்வாரியான பிரிவு)**

| | | |
|---|---|---|
| 1. | ஆகக் குறைந்த தேவையைப் பார்க்கிலும் உயர் கல்வி மற்றும் தொழில் தகைமைகள் | 20% |
| 2. | தொடர்புடைய அனுபவம் | 10% |
| 3. | பயிற்சி (குறுகிய கால) | 10% |
| 4. | நேர்முகப் பரீட்சைத் திறன்கள் | 40% |
| 5. | இணை பாடவிதானச் செயற்பாடுகள் மற்றும் ஆளுமை | 10% |
| 6. | விசேட அறிக்கை (சேவை அறிக்கை மற்றும் சம்பளவேற்றத் தகவல்கள் உள்ளிட்ட) | 10% |

**அறிவித்தலை பிரசுரித்தல்**

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழிப் பதங்களிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது இணக்கமின்மை இருப்பதாக உணரப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**செயலாளர்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

2025.05.30